STC. **403/2021** **PW-1**

நாள் : 17.05.2024

பெயர் : பாலச்சந்திரன்

த/பெ : திருவேங்கடம்

(எதிரி ஆஜர்)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி பெயர் சையத் சாகுல் அமீத். எதிரி எப்படி உங்களுக்கு பழக்கம் என்றால் நானும் எதிரியும் ஓசூரில் உள்ள கமாஷ் தொழில்கூடத்தில் ஒன்றாக பணி செய்து வந்தோம். எந்த காலகட்டதில் என்றால் 2015 ஆகும். எதிரி அந்நிறுவனத்தில் என்ன பணி செய்து வந்தார் என்றால் குவாலிட்டி கன்ரோல் சர்விஸ் டிபார்மென்டில் பொறியாளராக பணி புரிந்து வந்தார். நான் அந்நிறுவனத்தின் புரொடக்சன் டிபார்மென்டில் பணியாளராக பணிபுரிந்து வந்தேன். உங்களுக்கு வேறு தொழில் தெரியுமா என்றால் இல்லை. எதிரியின் முகவரி தெரியுமா என்றால் தெரியும். எதிரிக்கும் உங்கள் முகவரி தெரியுமா என்றால் தெரியும். 2015 – 2021 வரை எனக்கும் எதிரிக்கும் பழக்கம்.

எதிரி எதற்காக பணம் கேட்டார் என்றால் அவர் ஊரில் கட்டுமான தொழில் தொடங்க பணம் கேட்டார். 31.07.2015 ல் எங்கள் நிறுவனம் முடப்பட்டது நான் என் பணி தொகையை பெற்றுக்கொண்டேன். எதிரியும் பெற்றுக்கொண்டார் அப்போது கட்டுமான தொழில் தொடங்க பணம் கேட்டார்.

| **தேதி** | **பணம் கொடுத்த விவரம்** |
|---|---|
| 20.02.2018 | 20,000 |
| 16.03.2018 | 20,000 |
| 23.03.2018 | 10,000 |
| 26.03.2018 | 10,000 |

| | |
|---|---|
| 28.03.2018 | 10,000 |
| 11.06.2018 | 30,000 |
| 25.06.2018 | 15,000 |
| 14.01.2019 | 1,85,000 |
| 04.02.2019 | 50,000 |
| 26.08.2019 | 2,00,000 |
| 03.09.2019 | 3,00,000 |
| 04.09.2019 | 2,75,000 |
| 14.09.2019 | 2,50,000 |
| 16.09.2019 | 1,00,000 |
| 20.09.2019 | 4,00,000 |
| 03.10.2019 | 40,000 |

மேற்சொன்ன தொகைகளை நான் எதிரிக்கு கொடுத்தேன். கைமாறாக 3 முறையும், 13 முறை தொகைகள் (SBI, ICICI) வங்கி பரிவர்தனை மூலமாகவும் எதிரிக்கு நான் பணம் கொடுத்தேன்.நான் எதிரிக்கு எதிரி வைத்துள்ள ICICI வங்கி கணக்கிற்கு மாற்றியுள்ளேன். எதிரி எத்தனை வங்கிகளில் கணக்கு வைத்துள்ளார் என்றால் 2 வங்கிகளில் கணக்கு வைத்துள்ளார். 20.02.2021 எதிரி சாந்தோம் கிளையில் ICICI காசோலையை என்னிடம் கொடுத்தார்.

நீங்கள் 20.02.2018 முதல் கொடுத்த பணத்தை எதிரிக்கு கொடுத்த நீங்கள் திரும்ப பணம் கேட்கவில்லையா என்றால் கேட்டேன் அதற்காக தான் 20.02.2018 காசோலையை கொடுத்தார். நான் பணம் எதிரியிடம் கேட்டதற்காக 11.05.2020 ரூ.3000 மற்றும் 13.05.2020 ரூ.2000 மட்டும் கொடுத்தார். 14.01.2019 அன்று 1,85,000 கொடுத்தாக சொல்லும் நீங்கள் எங்கு வைத்து கொடுத்திர்கள் என்றால் என் வீட்டில் வைத்து தான் கொடுத்தேன். 04.02.2019 ல் எதிரி ரூ.50000 என் வீட்டில் வைத்து பெற்று சென்றார். இளவரசன் என்பவரை உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கும்

உங்களுக்கும் இளவரசனை தெரியும் அவர் வீட்டில் வைத்து தான் ஒரே முறை பணம் பெற்றார் என்றால் அது தவறு.

எதிரி என்ன தொழில் செய்து வந்தார் என்றால் அவருக்கு கொடுக்ககூடிய தகுதி உள்ளதா என்று தெரிந்து கொண்டிர்களா என்றால் நண்பர் என்ற முறையில் கொடுத்தேன். பணத்தை வட்டிகாக தான் கொடுத்தேன் என்றால் ஆமாம். எதிரியை தவிர்த்து யாருக்காவது கொடுத்திர்களா என்றால் இல்லை. எதிரி எப்போது எங்கு வைத்து காசோலை கொடுத்தார் என்றால் 22.02.2021 அன்று என் வீட்டில் வைத்து கொடுத்தார்.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

St/- ********

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.